**தலைப்பு 277- மொனராகலை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

## 1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | பிபில | (உ) | படல்கும்புற | (ஐ) | தனமல்வில |
| (ஆ) | மெதகம | (ஊ) | மொனராகலை | (ஒ) | செவனகல |
| (இ) | மடுல்ல | (எ) | புத்தல | (ஓ) | கதிர்காமம் |
| (ஈ) | சியம்பலாண்டுவ | (ஏ) | வெல்லவாய | | |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மொனராகலை மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள் ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஜுன் 29 திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல்

தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மொனராகலை மாவட்டச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 732 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டு முடிவளவில் அதில் ரூபா 727 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, மொனராகலை மாவட்டச் செயலகத்தின் நிகர நிதியேற்பாட்டில் சேமிப்புக்குள்ளாகிய தொகை ரூபா 5 மில்லியன் அல்லது நிகர நிதியேற்பாட்டில் 0.68 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| **செலவினம்** | **நிகர நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| மீண்டுவருவன | 340.9 | 340.5 | 0.4 | 0.12 |
| மூலதனம் | 390.7 | 386.2 | 4.5 | 1.15 |
| மொத்தம் | **731.6** | **726.7** | **4.9** | **0.67** |

#### (ஆ) அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

பல்வேறு பணிகளுக்காக 19 அமைச்சுக்களாலும் 16 திணைக்களங்களாலும் முறையே ரூபா 1,992 மில்லியன் மற்றும் ரூபா 645 மில்லியன் என மொத்தமாக ரூபா 2,637 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாட்டில் முறையே ரூபா 1,771 மில்லியன் மற்றும் ரூபா 615 மில்லியன் என மொத்தமாக ரூபா 2,386 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, முறையே ரூபா 221 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியன் என மொத்தமாக ரூபா 251 மில்லியன் சேமிப்புக்குள்ளாகியது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

மொனராகலை மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | அதி உயர் எல்லை | உள்ளவா றானது | அதிகுறை ந்த எல்லை | உள்ளவா றானது | அதி உயர் எல்லை | உள்ளவா றானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 27701 | 33 | 29 | 24 | 31 | 165 | 99 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மொனராகல மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளில் உள்ள மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 528 மில்லியன் ஆகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா . (மில்லியன்) |
| 6003/0000/00/0053/0000/000 | 282 |
| 6000/0000/00/0011/0602/000 | 300 |
| மொத்தம் | 582 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் அறிக்கைள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், மொனராகலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறு முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகளுக்கு அமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் அடங்கிய அவதானிப்புரைகளில் போதியதும் முக்கியமும் ஆன அவதானிப்புரைகள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு - 277- மாவட்டச் செயலகம், மொனராகலை

### 3.1 கணக்காய்வுச் சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்டச் செயலகத்தால் குடி நீர் சேகரிப்பிற்காக 2014 ஒக்டோபர் மாதத்தில் ரூபா 985,100 கொடுப்பனவு செய்யப்பட்டு குறிப்பிட்டதொரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நீர்த்தாங்கி மற்றும் நீர்க் கொள்கலன்கள் (CANS) என்பவற்றை விநியோகிப்பது தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மொனராகலை பிரதேச செயலகம் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 479,450 செலவில் கொள்வனவு செய்த பொருட்களது விநியோக விபரமும் அதில் ரூபா 449,450 இற்குரிய பற்றுச்சீட்டுக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மொனராகலை பிரதேச செயலகம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்குரிய நீர் பவுசர்களுக்கு 2014 ஆகஸ்ட் மாதத்தில் 4 சந்தர்ப்பங்களில் வழங்கிய ரூபா 19,424 கூட்டுத்தொகையுடைய 160 லீட்டர் எரிபொருள் ஓட்ட அட்டவணைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனராகலை பிரதேச செயலகம் விளையாட்டுக் கழகம் ஒன்றிற்கு விளையாட்டுத்துறைப் பொருட்களை விநியோகிப்பதற்காக 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று குறிப்பிட்டதொரு தனியார் நிறுவனத்திலிருந்து ரூபா 1,000,000 செலவில் விளையாட்டுத்துறைப் பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தது. குறித்த பொருட்களது பெறுவனவு மற்றும் விநியோகம் தொடர்பான விபரமும் விநியோகிக்கப்படாத எஞ்சிய விளையாட்டுத்துறைப் பொருட்களது விபரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்

மொனராகலை மாவட்டச் செயலகத்திற்கு மீளாய்வாண்டின்போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்படவில்லை. அந்த ஐய வினாக்கள் தொடர்பான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 5,466,980 ஆகும்.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

பல்வேறு பணிகளுக்காக ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் புலனாகின.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டில் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 02 மகளிர் சங்கங்களுக்கு மலர்ச் செண்டுகள், மருத்துவச் சிகிச்சை உபகரணங்கள், தையல் இயந்திரங்கள், ஹேஸ்பிரே தெளிப்பதற்கான இயந்திரம் என்பவற்றை வழங்குவதற்கு 2014 டிசெம்பர் 01 ஆந் திகதியன்று ரூபா 1,450,000 நிதியேற்பாடு மொனராகலை மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந் நிகழ்ச்சித்திட்டத்தைப் பிரதேச செயலகங்களுக்கூடாகக் செய்யாது அதில் ரூபா 1,447,800 ஊவா மாகாண சபையின் சுகாதார, தேசிய மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளருக்கு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) அமைச்சினது நிதியேற்பாட்டின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் விநியோகிப்பதற்கென 09 பிரதேச செயலகங்கள் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 37,712,454 கூட்டுத்தொகைச் செலவில் 113,278 கூறுப் பொருட்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்திருந்தன. 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அப் பொருட்களும் உபகரணங்களும் நலன்பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்படாது பிரதேச செயலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) மொனராகலை பிரதேச செயலகம் கும்புக்கன தெகல் அரம்ப தொடக்கம் மாகல் ஆர வரை மின்சார வேலியை அமைப்பதற்காக 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 5,411,832 செலவில் வேலிகளை அமைப்பதற்கான தூண்களையும் துணைப்பொருட்களையும் கொள்வனவு செய்திருந்தன. 2015 மார்ச் 25 ஆந் திகதியளவிலும் குறித்த நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாதிருந்தது. மின்சார வேலியை நிர்மாணிப்பதற்கு

முன்னர் வன பரிபாலனத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமாயினும், அதற்கான அங்கீகாரம் 2015 மார்ச் 13 திகதியே கோரப்பட்டிருந்தது. இதற்கமைய, நிர்மாண வேலைக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்பே கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) மொனராகலை பிரதேச செயலகம் 2014 கமநெகும விசேட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரத்தனபிட்டிய நீர்த் திட்டத்தை அமுலாக்குவதற்கு 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதியன்று குறிப்பிட்டதொரு விவசாய அமைப்பிற்கு ரூபா 1,485,990 இற்கான ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. 2015 மார்ச் 26 ஆந் திகதியளவில் அதற்கென ரூபா 1,267,567 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,220,000 குழாய் நீருக்கான துணைப் பாகங்கள் மற்றும் நீர்ப்பம்பி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான செயற்திட்டங்களை அமுல்படுத்தும் சங்கத்திற்கு விவசாய அமைப்பால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் குழாய் நீருக்கான துணைப்பாகங்களும் நீர்ப்பம்பி பிரதேச செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டத்தை அமுலாக்கும் சங்கத்தால் அவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வுத் தினம் வரை நீர்த் திட்டம் அமுலாக்கப்படாதிருந்தது.

(v) மொனராகலை பிரதேச செயலகம் 2014 ஆம் ஆண்டில் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹுலங்தாவ தெற்கு குடிநீர் செயற்திட்டத்தினது எஞ்சிய வேலையைப் பூர்த்தி செய்வதற்காக குறிப்பிட்டதொரு விவசாய அமைப்பிற்கு ரூபா 980,465 இற்கான ஒப்பந்தத்தை 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வழங்கியிருந்தது. கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 25 ஆந் திகதியளவில் அதன் பொருட்டு ரூபா 799,919 செலவழிக்கப்பட்டிருந்தது. பிரதேச செயலகத்தால் நீர் மானிகளைக் கொள்வனவு செய்து அவற்றைப் பொருத்துவதற்காக நீர் மானி ஒன்றிற்கு ரூபா 2,850 வீதம் 90 நீர் மானிகளுக்கு ரூபா 256,500 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், ஒப்பந்தக்காரர் நீர் மானி ஒன்றை ரூபா 2,450 வீதப்படி கொள்வனவு செய்திருந்ததுடன் 2015 மார்ச் 25 ஆந் திகதியளவில் 56 நீர் மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) மொனராகல பிரதேச செயலகம் 03 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நிறைவேறாத 03 வேலைகளுக்கு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 89,163 கூட்டுத்தொகையைக் கொடுப்பனவு செய்திருந்தது.

(vii) கதிர்காமம் பிரதேச செயலகத்தால் வள்ளிமாதாகம கிராமத்திற்கு குழாய் நீரை நீடிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 3,790,162 கொடுப்பனவு செய்தபோதும், கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 23 ஆந் திகதியளவிலும் குறித்த வேலை முடிவடையாதிருந்தது.

(viii) இரண்டு வேலைகளை அமுல்படுத்துவதற்காக 2014 டிசெம்பரில் ரூபா 2,334,090 தேசிய முதியோர் செயலகத்திலிருந்து கதிர்காமம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்தது. கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 23 ஆந் திகதியளவிலும் குறித்த வேலையை ஆரம்பிக்காது அத் தொகை வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது.

(ix) இரண்டு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக மொனராகலை பிரதேச செயலகத்திற்கு 2013 ஏப்ரல் 04 மற்றும் 2013 ஒக்டோபர் 04 ஆந் திகதிகளில் புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு அனுப்பிய தொகை ரூபா 80,000 ஆகும். 2015 மார்ச் 26 ஆந் திகதியளவிலும் குறித்த பணி நிறைவேறாது அத் தொகை வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது.

(x) விஹாரைகளுக்கான உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 டிசெம்பர் 13 ஆந் திகதியன்று மடுல்ல பிரதேச செயலகத்திற்கு புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சால் இரு விஹாரைகளுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 20,000 குறித்த விஹாரைகளது தாயக சபைகளுக்கு கொடுப்பனவு செய்யப்படாது அமைச்சிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(xi) தனமல்வில பிரதேச செயலகம் 2014 ஆம் ஆண்டில் அரச கரும மொழி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு வழங்கியிருந்த நிதியேற்பாட்டின் மூலம் கொள்வனவு செய்திருந்த ரூபா 16,550 பெறுமதியான 02 கூறுகளைக் கொண்ட பொருட்களையும் உபகரணங்களையும் குறித்த நலன் பெறுநர்களுக்கிடையே விநியோகிக்காது பிரதேச செயலகத்தில் வைத்திருந்தது.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகளைக் கடந்த ரூபா 27,569,509 தொகையான வைப்புகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2014 ஒக்டோபர் 31 ஆந் திகதிய PF/FD/04/148 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தானிய உற்பத்திக்கென சுழற்சி நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு ரூபா 300 மில்லியன் பெறப்பட்டு வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது கணக்காய்வுத் தினமான 2015 ஏப்ரல் 20 ஆந் திகதியளவிலும் அது செயலற்ற வைப்பாக இருந்தது.

(இ) மொனராகலை மாவட்டச் செயலகக் கட்டிடத் தொகுதியை திறந்து வைக்கும் விழாவின்போது மின்சாரச் செலவாக இலங்கை மின்சார சபைக்கு 2014 டிசெம்பர் 04 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட ரூபா 204,780 இற்கான காசோலை இரத்துச் செய்யப்பட்டு 2014 டிசெம்பர் 27 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2015 ஏப்ரல் 20 ஆந் திகதியளவிலும் அந்த வைப்பு தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

**3.5 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

27701 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கினது 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,244,107 ஆகும். அந் நிலுவை மீதிகள் 01 முதல் 05 ஆண்டு காலமாக இருந்து வருவதுடன் அவற்றை அறவிடுவதற்கு மாவட்டச் செயலகத்தால் இயலாதிருந்தது.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மொனராகலை மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

---

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாதோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறோ இருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | **சொத்துக்களின் வகை** | **கூறுகளது எண்ணிக்கை** | **பயன்படுத்தப்படாதோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறோ இருந்த காலம்** |
|---|---|---|---|
| | | | **ஆண்டுகள்** |
| (i) | காணி (ஹெக்டெயர்கள்) | 0.34 | 05 |
| (ii) | கட்டிடங்கள் | 04 | 02 முதல் 09 வரை |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 07 | 10 முதல் 20 வரை |
| (iv) | இயந்திர சாதனங்கள் | 01 | 02 |

(ஆ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

---

மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்த்து வைக்கப்படாத ஓராண்டிற்கும் குறைவான காலந்தொட்டு நிலவி வரும் பொறுப்புகள் ரூபா 355,177 ஆகும்.

**3.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** |
|---|---|---|
| | **ரூபா** | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் பிரிவு 5:4:1 ஆம் பிரிவு | 117,634 | பிபில பிரதேச செயலகத்தால் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 சனவரி வரை |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்காளரது உத்தியோகபூர்வ மனைக்கான வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் ------------------------------------------------ | | |
| | (i) நிதிப் பிரமாணம் 138(8) | 116,375 | 2014 ஆம் ஆண்டில் விலைப் பட்டியல்களைச் சமர்ப்பித்திராத பூர்த்தி செய்யப்படாத 03 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்கு கதிர்காமம் பிரதேச செயலகம் கொடுப்பனவு செய்திருந்தது. |
| | (ii) நிதிப் பிரமாணம் 237 | 1,034,933 | மொனராகலை மற்றும் கதிர்காமம் பிரதேச செயலகங்கள் கையிருப்புச் சான்றிதழ்கள் இல்லாது கொள்வனவுகளுக்கு கொடுப்பனவு செய்திருந்தது. |
| | (iii)நிதிப் பிரமாணங்கள் 137,138,139, மற்றும் 237 | 9,706,800 | மொனராகலை, கதிர்காமம், தனமல்வில, புத்தல மற்றும் மெதகம என்ற 05 பிரதேச செயலகங்கள் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தியற்ற கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு 91 காசோலைகளை வரைந்து கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் அவற்றை உரியவர்களுக்கு வழங்காது தன்னிடம் வைத்திருந்தன. |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை ------------------------------------------------------ | | |
| | ஜுன் 29 ஆந் திகதிய EST/07TRAVEL/06/3030 ஆம் இலக்க தாபனப் பணிப்பாளரின் கடிதத்தினது 2 ஆம் பந்தி | 23,000 | கதிர்காமம் பிரதேச செயலகத்தில் கணக்காளராகப் பதில் கடமையாற்றுவதற்கென செவனகல பிரதேச செயலகத்தின் கணக்காளருக்கு இணைந்தபடி வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை<br>-----------------------------------------------<br>2013 ஜுலை 05 ஆந் திகதிய - PC/MD/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் | பயன்படுத்தப்படாது அழிவுற்றவாறிருக்கும் பழைய வாகனங்களும் இயந்திர சாதனங்களும் 03 மாதங்களுக்குள் கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், மடுல்ல பிரதேச செயலகத்தின் 03 வாகனங்களின் பொருட்டு அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3.8 உள்நாட்டு நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிட்டு விடுதல், செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிட்டு விடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது தெரிய வந்த சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிட்டு விடுதல்

நான்கு பிரதேச செயலகங்களால் ரூபா 274,046,001 மதிப்பீடு செய்யப்பட்ட 37 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின்போது ஆரம்பிக்கப்பட்டு அதற்கென ரூபா 10,765,959 கூட்டுத்தொகை செலவிடப்பட்டதன் பின்னர் அவை கைவிடப்பட்டிருந்தன. விபரம் கீழே காணப்படுகின்றது.

| **பிரதேச செயலகம்** | **செயற்திட்ட எண்ணிக்கை** | **மதிப்பிடப்பட்ட பெறுமதி** | **2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம்** | **கைவிட்டதற்கான காரணம்** |
|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | |
| மடுல்ல | 25 | 266,079,847 | 10,128,575 | குறிப்பிடப்படவில்லை |
| தனமல்வில | 01 | 240,760 | 72,000 | அதிக மழை |
| வெள்ளவாய | 02 | 548,391 | - | போதிய நிதி ஏற்பாடு இல்லாமையும் அதிக மழையும் |
| சியம்பலாண்டுவ | 09 | 7,177,003 | 565,384 | ஒப்பந்தக்காரர் செயற்திட்டங்களைக் கைவிடுதல் 04 செயற்திட்டங்களது தகவல்கள் குறிப்பிடப்படவில்லை |
| மொத்தம் | 37 | 274,046,001 | 10,765,959 | |

(ஆ) நிதி விடுவிக்கப்பட்டபோதும் முன்னேற்றம் பெறாதிருந்த செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செவனகல பிரதேச செயலகம் கொவுல் ஆர வடக்கு நீர்த் திட்டத்திற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 781,131 கூட்டுத்தொகையைச் செலவிட்டிருந்தபோதும், கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் குறித்த செயற்திட்டத்திற்கு மின்சாரத்தைப் பெற முடியாது போனமையால் செயற்திட்டம் அமுலாக்கப்படாதிருந்தது.

(ii) செவனகல பிரதேச செயலகம் கொவுல் ஆர தெற்கு முன்பள்ளி பாடசாலையினது எஞ்சிய வேலையை பூர்த்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் மக்கள் பிரதிநிதிகளது விசேட செயற்திட்டங்களின் கீழ் 2014 டிசெம்பர் 25 ஆந் திகதியன்று ரூபா 199,168 கொடுப்பனவு செய்து சீமெந்து ரெம்கோ தகடுகள், கம்பி என்பவற்றை பெற்றிருந்தது. எனினும், 2015 மார்ச் 30 ஆந் திகதியளவிலும் மரப் பலகைகளைப் பெறுவதில் நிலவிய வசதியின்மை காரணமாக கூரை போடப்படாதிருந்தது.

(iii) செவனகல பிரதேச செயலகம் 2014 ஆம் ஆண்டில் மக்கள் பிரதிநிதிகளது விசேட செயற்திட்டங்களின் கீழ் கடுபிலகம அருண முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு 55 எஸ்பொஸ்டஸ் தகடுகளை வழங்குவதற்காக 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 69,925 கொடுப்பனவு செய்திருந்தபோதும், 2015 மார்ச் 30 ஆந் திகதியளவில் கட்டிடத்திற்கான அத்திவாரத்தை மாத்திரமே நிர்மாணித்திருந்தது.

**3.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

மாவட்டச் செயலகத்தின் சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தெரிய வந்தன. விபரம் கீழே காணப்படுகின்றது.

(அ) கதிர்காமம் எசல விழாவின் பொருட்டு 2009 ஆம் ஆண்டு முதல் 2012 வரை மேலதிக மின்சாரத்திற்காக மின் உற்பத்தி இயந்திரத்தை இலங்கை மின்சார சபை கட்டணமின்றி வழங்கியிருந்தது. எனினும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மின் உற்பத்தி இயந்திரத்தை வழங்குவதற்காக இலங்கை மின்சார சபைக்கு மாவட்டச் செயலகம் ரூபா 4,143,354 வழங்கியிருந்தது.

(ஆ) ஒரே வகையான 4 மின் உற்பத்தி இயந்திரங்களை வழங்குவதற்கு 2013 ஆம் ஆண்டிலும் பார்க்க 2014 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 294,180 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் 04 மின் உற்பத்தி இயந்திரங்களுக்குத் தொழிலாளர் கூலியாக ரூபா 1,406,511 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை மற்றும் கூறு விலைகள் என்பவற்றினது விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டில் 4 மின் உற்பத்தி இயந்திரங்களுக்கு 530 லீட்டர் எரிபொருள் வழங்குவதற்காக ரூபா 62,342 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அத்தொகையைக் குறித்த நபர்களிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மாவட்டத் திட்டமிடல் செயலகத்திற்குரிய உத்தியோகபூர்வ மனை அமைச்சின் செயலாளர் அல்லது மாவட்டச் செயலாளரின் அங்கீகாரமோ வாடகை உடன்படிக்கையோ இல்லாது பாதணி உற்பத்தி தொழிற்சாலையை நடாத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகபூர்வ மனைக்கு 2010 மார்ச் 08 ஆந் திகதியன்று ரூபா 1,200 மாதாந்த சிக்கன வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, 2013 செப்டெம்பர் தொடக்கம் 2015 மார்ச் வரை ரூபா 22,800 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) மொனராகலை மாவட்டச் செயலகக் கட்டிடத் தொகுதியைத் திறந்து வைப்பது தொடர்பான விழாவிற்கு மாவட்டச் செயலகத் தலைப்புகளிலிருந்து ரூபா 272,471 மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தலைப்புகளிலிருந்து ரூபா 3,697,734 என மொத்தமாக ரூபா 3,970,205 செலவிடப்பட்டிருந்தது. விழாவிற்கான பொருட்களைக் வாடகைக்குப் பெற்று அதற்கென ரூபா 3,190,600 செலவிடப்பட்டடிருந்த போதும், அதன் பொருட்டு கூறு விலைகள் முறையாகக் கோரப்படவில்லை.

## 3.10 மோசடித் தன்மையிலான நிதிக் கொடுக்கல் வாங்கல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியின் போது மொனராகலை பிரதேச செயலகத்தின் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் நலன்கள் மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தினூடாக கொடுப்பனவு செய்வதற்காக விடுவித்த தொகை ரூபா 14,497,572 ஆகும். இதில் பல்வேறு நலன் பெறுநர்களது பெயர் குறிப்பிடப்பட்டு ரூபா 4,659,980 கொடுப்பனவு செய்யப்பட்டதாகப் போலியாகக் குறிப்பிட்டு நிதி மோசடி இடம் பெற்றிருந்தது.

**3.11 இழப்புகளும் நட்டங்களும்**

---

மொனராகலை பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி ஒன்றினது செஸி உடைந்து போனமை சம்பந்தமாக மாவட்ட இயந்திரப் பொறியியலாளருக்கு அறிவித்து அறிக்கை ஒன்றைப் பெற்று குறித்த விசாரனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது தெரிய வந்த சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

(அ) மொனராகலை பிரதேச செயலகப் பகுதியின் 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு விநியோகிக்கப்படுவதற்காக 2014 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் தெங்கு அபிவிருத்திச் சபையிடமிருந்து 4,728 தென்னங் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அத் தென்னங்கன்றுகளது விநியோகம் தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகள் 2014 ஆகஸ்ட் 12 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) மடுல்ல கமநல சேவைப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு 60 சதவீத மானியத்தில் சோழ விதைகளை வழங்குவதற்கான செயற்திட்டத்தின் கீழ் 5 கிலோ கிராம் சோழ விதைப் பெக்கெட்டுக்கள் 5700 இற்கு குறிப்பிட்டதொரு விற்பனை நிறுவனத்திற்கு ரூபா 26,790,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 5 கிலோ கிராம் எடை உடைய 2641 விதைப் பெக்கட்டுக்கள் விநியோகிக்கப்படாமையால் நலன்பெறுநர் உதவு தொகையான ரூபா 4,965,080 ஆனது 2015 ஏப்ரல் 29 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது. அவ் விதைப் பெக்கட்டுக்கள் 2015 ஜூன் மாதத்தில் காலாவதியாகிவிருந்தன. அதற்கமைய, 2641 விதைப்பெக்கட்டுக்களுக்கு அரசாங்கம் கொடுப்பனவு செய்த ரூபா 12,412,700 மொத்தச் செலவினமும் சிக்கனமற்ற செலவினமாகியது.

**3.13. தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

---

2013 ஏப்ரல் 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழுக் கூட்டத்தில் 2005 ஆம் ஆண்டு முதல் 2010 வரையிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டன. அங்கு மேற்கொள்ளப்பட்ட குழுத் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகள் என்பவற்றை அமுல்படுத்துவதற்கு மீளாய்வாண்டு முடிவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

**3.14 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது கீழே குறிப்பிடப்பட்ட நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மொனராகலை மாவட்டச் செயலகக் களஞ்சியத்தில் பணி புரியும் உணவு ஆணையாளர் திணைக்களப் பிரதியீட்டுக் காவலாளிகள் இருவரது 2014 ஆம் ஆண்டிற்காக மாவட்டச் செயலகம் பெற வேண்டிய சம்பளம் ரூபா 586,044 ஆகும். எனினும், குறித்த திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தொகை ரூபா 398,432 ஆகும். அதற்கமைய உணவு திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட தொகை ரூபா 398,432 ஆகும். இதற்கமைய, உணவுத் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 187,612 தொகையானது 2015 ஜனவரியிலும் பெறப்படாதிருந்தது.

(ஆ) சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பகுதியில் முத்துக் கண்டிய இயக்கத்திற்கு காணிகளைச் சுவீகரிக்கும்போது 24 காணித் துண்டுகளுக்கு இழப்பீடாக வழங்க வேண்டிய ரூபா 6,686,850 கணக்காய்வுத் தினமான 2014 நவம்பர் 19 ஆந் திகதியன்றும் வழங்கப்படாதிருந்தது.

(இ) சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவில் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் 15 குத்தகையாளருக்குக் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. 1995 ஜுன் 15 முதல் 2015 நவம்பர் 20 ஆந் திகதி வரை குத்தகையான ரூபா 7,875,397 கூட்டுத்தொகையும் ஒரு குத்தகையாளரிடமிருந்து 2005 மார்ச் 31 முதல் 2014 நவம்பர் 01 ஆந் திகதி வரை ரூபா 31,000 குத்தகை வாடகையுமாக ரூபா 7,906,397 கூட்டுத்தொகை அறவிடப்படாதிருந்தது.

(ஈ) 06 பிரதேச செயலகங்கள் சமுர்த்தி சீவனோபாய சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை நலன் பெறுநர்களுக்கு வழங்கிய கடனில் ரூபா 6,232,493 கடன் மீதியானது 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**3.15. மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 28 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 02 | 26 |
| (iii) | இரண்டாம் நிலை | 744 | 633 | 111 |
| (iv) | ஆரம்ப நிலை | 110 | 105 | 05 |
| | மொத்தம் | 923 | 768 | 155 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவிலான 155 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) மாவட்டத்தின் 11 பிரதேச செயலகங்களில் 07 பிரதேச செயலகங்களில் இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கடமை ஆற்றும் அடிப்படையில் பிரதேச செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) உதவி சமுர்த்தி ஆணையாளர் பதவி 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்தது. தற்போது திவிநெகும பணிப்பாளர் பதவி எனப் பெயரிடப்பட்டுள்ள இப்பதவி கணக்காய்வுத் தினமான 2015 ஏப்ரல் 10 ஆந் திகதியன்றும் வெற்றிடமாக இருந்தது.

(ஈ) மொனராகலை மாவட்டச் செயலகத்தில் உதவி காணி ஆணையாளர் பதவி ஏறக்குறைய 03 ஆண்டுகளாக வெற்றிடமாக இருந்தது.

(உ) கதிர்காமம் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் எனும் 4 பதவிகளுக்கும் வெற்றிடங்கள் நிலவியதுடன் அதன் பொருட்டு பதில் கடமையாற்றும் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) ஏனைய அமைச்சுக்களின் கீழ் மாவட்டச் செயலகத்திலும் மற்றும் சகல பிரதேச செயலகங்களிலும் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கும் மேலதிகமாக ஒரு சிரேட்ட நிலையின் உத்தியோகத்தரும் மூன்றாம் நிலையில் 06 உத்தியோகத்தர்களும் இரண்டாம் நிலையில் 443 உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.